RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



OPEN ACCESS

# சிலம்பில் கலைகள்

அ.சே. சேக் சிந்தா [அ, *]

[அ] தமிழ்த்துறை, சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி, திருநெல்வேலி., இந்தியா,

# A Study of the Arts in Silappathikaram

**A.S. Shaik Sindha [a, *]**

[a] Department of Tamil, Sadakathullah Appa College, Tirunelveli-627011, Tamil Nadu, India

*Corresponding Author: dr.sindha@yahoo.com

**ABSTRACT**

The Silappathikaram, one of the greatest epics of classical Tamil literature, is celebrated as the finest embodiment of the Muthamizh tradition, integrating literature (Iyal), music (Isai), and drama (Natakam) into a unified artistic masterpiece. Whether viewed from literary, musical, or theatrical perspectives, the epic stands as an outstanding work of artistic excellence. Within the narrative, the arts are not presented merely as ornamental features; rather, they function as vital forces that advance the storyline and enrich its philosophical and cultural meanings. In particular, the epic provides detailed portrayals of performance art, music, dance, and drama. The celebrated performance of Madhavi offers a comprehensive account of the Tamil tradition of dance, musical excellence, melodic modes (Pann), and expressive movements, including Angika (physical expression) and Sattvika (emotional expression). These descriptions provide valuable insights into the artistic sophistication of post-Sangam Tamil society, including stagecraft, performance conventions, and audience participation. The epic further demonstrates that art was not merely a form of entertainment but was closely connected with social status, royal patronage, and economic prosperity. The flourishing of artistic traditions within royal courts, urban festivals, and temple institutions reflects the significant role of the arts in the cultural life of the Tamil people. The social recognition, respect, and patronage accorded to artists likewise testify to the esteemed position they occupied in society. At the same time, Silappathikaram illustrates the remarkable ability of the arts to express the deepest human emotions. Feelings of love, separation, grief, and the quest for justice are conveyed with profound emotional intensity through artistic forms. Thus, the arts become both the lifeblood of the narrative and powerful expressions of Tamil cultural identity. This article argues that the artistic traditions portrayed in Silappathikaram constitute a comprehensive cultural record that reflects the aesthetic heritage, social values, and spiritual worldview of the ancient Tamils.

**Keywords:** Silappathikaram, Tamil society, Madhavi, Artistic Forms, Classical Tamil Literature

## முன்னுரை

பழந்தமிழர்களின் மனிதன் வாழ்வில் காணப்பெறும் ஒவ்வொரு அசைவும் கலையேயாகும். காதல், வீரம், சமயம் முதலிய பண்புகளும் கலைகளே ஆகும். தொல்மனிதன் விலங்கு போல வாழ்ந்தான். அவன் விலங்குத் தன்மையிலிருந்து வேறுபட்டு நின்ற போது அவன் உள்ளத்தில் தோன்றிய ஒளியே கலையாகும். சங்க கால மனிதர்கள் பல்வேறு கலைகளை நிகழ்த்தியுள்ளதைச்

சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. சிலப்பதிகாரமும் பல்வேறு கலைகளைப் பற்றி கூறுகின்றன. அவற்றை ஆராவதாய் இக்கட்டுரை அமைகிறது.

## கலை-விளக்கம்

கலை என்னும் சொல் “கல்” எனும் ஏவற் பகுதியிலிருந்து தோன்றியதாகும். “கல்வி” என்னும் சொல்லுக்கு இதுவே முதன்மைச் சொல்லாக உள்ளது “கலை எனும் சொல் மானின் ஒரு வகையினையும் ஆண் குரங்கினையும் குறிப்பதாகத் தொல்காப்பியம் கூறுகின்றது”

சிலப்பதிகாரத்தில் கட்டிடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை, நாடகக்கலை, கூத்துக்கலை ஆகிய அனைத்துக் கலைகளும் சிறந்து விளங்குகின்றன. இசை, கூத்து, நாடகம் ஆகிய கலைகளுக்கு அரசு ஆதரவும், பொதுமக்கள் ஆதரவும் மிகுதியாக இருந்து வந்தன என்பதையும் இக்காப்பியத்தில் அறியலாம்.

## கட்டிடக்கலை

கட்டிடங்கள் 'நகர்' என்ற சொல்லால் குறிக்கப்பெறுகின்றன. கோவில்கள் சுடுமண் ஓங்கிய நெடுநகர்' என வருணிக்கப்படுகின்றன. கோவில், அரண்மனை, மதில், மாளிகைகள் ஆகியவற்றின் அமைப்பு பற்றிச் சங்க இலக்கிங்களில் உள்ளன.

மாளிகை, மண்டபம் பற்றிய செய்திகள் சிலப்பதிகாரத்தில் காணப்படுகின்றன. மானின் கண்போல் துளை செய்த காற்றியியங்கும் சாளரங்களை உடைய மாளிகைகள் இருந்தன என்பதனை,

"மான்கண் காலதர் மாளிகை இடங்களும்" (சிலம்பு.இந்.விழ.காதை.8)

என்ற பாடல் வழி அறிய முடிகின்றது. திருமாவளவன் வடபுலத்தாரிடமிருந்து பரிசாகப் பெற்ற மண்டபமானது கைவினை மிக்க தொழில் சிறப்புடையதாக அமைந்திருந்தது. என்பதனை,

"நுண்வினைக் கம்மியர் காணா மரபின" (சிலம்பு.இந்.விழ.காதை.106)

என்று கூறுகின்றது.கோவலனும் கண்ணகியும் ஏழடுக்கு மாடிகளில் நான்காவது மாடியில் இருந்ததனை,

"நெடுநிலை மாடத்து இடைநிலத்து இருந்துழி (சிலம்பு.மனை.படு.காதை13)

என்ற பாடலிலிருந்து அறியலாம்.

இதிலிருந்து கட்டடக்கலையில் தேர்ச்சி பெற்ற வல்லுநர்கள் சிலப்பதிகாரத்தில் இருந்தனர் என்பதை அறிய முடிகிறது.

## சிற்பக்கலை

சிற்ப உருவங்கள் பெரும்பாலும் தெய்வங்களாக அமைக்கப்பட்டிருந்தன. மேலும் கற்பனையோடும், இயற்கையையும் வைத்தும் சிற்பங்கள் செய்யப்பட்டிருந்தன. பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே தமிழகத்தில் சிற்பக்கலை உண்டென்பதற்கு நடுகற்கள் சான்றாக உள்ளன.

"காட்சி கல்கோள் நீர்ப்படைநடுதல்

சீர்த்தகு மார்பில் பெரும்படை வாழ்த்தலென்று

இரு மூன்று மரபிற் கல்லொடு புணர” (தொல்.பொருள்.நூஎ.63)

என்று தொல்காப்பியம் கூறுகின்றது. சிலப்பதிகாரத்தில், செங்குட்டுவன் கண்ணகிக்குச் சிலை அமைக்க இமயத்திலிருந்து கல் கொண்டு வந்தான் என்பதனை,

"பொற்கோட்டு இமயத்து பொருவறு

பத்தினிக் கற்கால் கொண்டனன்

காவலன் ஆங்கென்" (சிலம்பு கால்.காதை 253)

என்ற பாடல் வரிகள் உணர்த்துகின்றன. தெய்வ உருவங்கள் செய்வதற்குக் கல், மண், மரம் ஆகியவற்றைப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்ற செய்தியை,

"மண்ணினும் கல்லினும் மரத்தினும்

சுவரினும் கண்ணிய தெய்வம் காட்டுநர் வகுக்க"(மணிமேகலை:38)

என்று மணிமேகலை குறிப்பிடுகின்றது.

## ஓவியக்கலை

ஓவியக்கலையைச் சிற்பக்கலைக்கு முன்னோடி என்று கூறுவர். ஓவியங்களை முதலில் 'கண்ணெழுத்து' என்று வழங்கியுள்ளனர். தமிழ் இலக்கியத்தில் 'எழுத்து' என்பதற்கு 'ஓவியம்' எனப் பொருள் இருந்தன என்று பரிபாடல், குறுந்தொகை நூல்கள் கூறுகின்றன.

நச்சினார்க்கினியர் ஓவியரை 'நோக்கினார் கண்ணிடத்தே தம் தொழில் நிறுத்துவோர்' என்று இலக்கணம் வகுத்துள்ளார்.

சிலப்பதிகாரத்தில் அரங்கில் கட்டடப்பட்ட திரைச்சீலைகளுக்கு ஓவியம் வரையப்பட்டிருந்தன என்ற செய்தியை,

"கரந்துவரல் எழினியும் புரிந்துடன்

வகுத்து ஆங்கு ஓவிய விதானத்து"

(சிலம்பு.அரங்.காதை 100-111)

என்று கூறுகின்றன. ஓவியம் பற்றிய செய்திகள் மணிமேகலையிலும் இருந்தன என்பதனை,

"வெண்சுதை விளக்கத்து வித்தவத் இயற்றிய கண்கவர் ஓவியம்" (மணிமேகலை 3:130-131)

என்ற இப்பாடல் உணர்த்துகிறது.

## இசைக்கலை

இசை என்னும் சொல்லுக்கு 'இசைவிப்பது', 'தன்வயப்படுத்துவது' என இருபொருள்படும். இசை என்பது கேட்போரைத் தன் வயப்படுத்தி கல்மனதையும் கரைந்துருகச் செய்யும் என்பதனைச் சிலப்பதிகாரப் பாடல்கள் வழி அறியலாம். இந்திர விழாவின் போது இரவும் பகலுமாக இசை நிகழ்ச்சிகள் நடந்தன என்பதனை,

"கண்ணு ளாளர் கருவிக் குயிலுவர்

விழவுக்களி சிறந்த வியலுள் ஆங்கண்"(சிலம்பு.இந்.விழ.காதை 184-188)

என்ற பாடல் வரிகள் மூலம் அறியலாம். தொல்காப்பியத்தில் இசைத்தமிழ் பயின்று வருவதை,

"அளபிறந் துயர்த்தலும் ஒற்றிசை நீடலும்

உளவென மொழிப இசையோடு சிவணிய"(தொல். எழுத்து. நூ. எ.33)

என நெட்டிசைப்பிலும் இசை ஒலிக்கிறது என்று தொல்காப்பியர் கூறுகிறார்.

## கூத்துக்கலை

இசைக் கலையுடன் தொடர்புடையது "ஆடற்கலை' என்னும் கூத்துக்கலை கூத்தினை 'ஆரியக்கூத்து', 'தமிழ்க்கூத்து' என இருவகைப்படுத்தி சிலப்பதிகாரம் கூறுகின்றது. மாதவி ஆடிய பதினொரு ஆடல்களும் ஆரியக் கூத்துகள்.மக்கள் ஆடிய குரவைக் கூத்து, துணங்கைக் கூத்து முதலியன தமிழ்க் கூத்துகள்.

அல்லியம், கொடுகொட்டி, பாண்டரங்கம், மல்லாடல், துடி, குடை, குடம், பேடி மரக்கால், பாவை, கடையம் என்கிற பதினோர் ஆடல்களையும் மாதவி ஆடினாள் என்ற செய்தியை,

"அவரவர் அணியுடன் அவரவர்

கொள்கையின் நிலையும், பரதமும்

நீங்கா மரபின் பதினோர் ஆடலும்,

பாட்டின் பகுதியும் விதிமான்

கொள்கையின் விளங்கக் காணாய்" (சிலம்பு.கடலாடு காதை 64-67)

என்று கூறுகின்றது.

## நாடகக்கலை

கதை தழுவி வரும் நடிப்பு, 'நாடகம்" எனப்பட்டது. தமிழ்மொழியில் தோன்றிய முதல் நாடகக் காப்பியம் சிலப்பதிகாரமாகும். நாடகம் என்ற சொல் சிலப்பதிகாரத்தில் நடனத்தையே குறிக்கின்றது. சாக்கைகூத்து என்பது காப்பியத்தின் நாடகத் தன்மையைக் கூறுகின்றது.நாடகம் என்ற சொல் முதன் முதலில் தொல்காப்பியத்திலே காணப்படுகின்றது.

"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்" (தொல் அகம் நூ. எ.56)

என்ற நூற்பா உணர்த்துகிறது.

சிலப்பதிகாரத்தில் நாடக அரங்குகளில் உள்ள நாடக மகளிர்கள் இருகரம் கூப்பி அழகுடன் நின்று வாழ்த்தினார்கள் என்ற செய்தியினை,

"நாடக மடந்தையர் ஆடரங்கு யாங்கணும் கூடையிற் பொலிந்து"

(சிலம்பு.கால்கோட் காதை. 68)

என்ற வரிகள் விளக்குகின்றன.மாதவி தலையரங்கேற இருந்த நாடக அரங்கம் கைவேலை மிக்க வேலைப்பாடுகளுடன் அழகாக இருந்துள்ளன என்பதனை,

"விருந்துபடக் கிடந்த அருந்தொழில் அரங்கத்து"

(சிலம்பு.கால்கோட் காதை 113)

என்ற பாடல் வரி உணர்த்துகின்றது.

## முடிவுரை

செந்தமிழின் மிகச் சிறந்த முத்தமிழ் காப்பியமாக விளங்கியது சிலப்பதிகாரம் இயல்,இசை, நாடகம் என எந்த வகையில் பார்த்தாலும் உயர்ந்த உன்னத காப்பியமாக விளங்குகிறது. இக்காப்பியத்தில் கலைகள் வெறும் அலங்கார அம்சங்களாக அல்லாது, கதையின் முன்னேற்றத்திற்கும் கருத்தியல் விளக்கத்திற்கும் உயிரூட்டும் மையச் சக்திகளாகச் செயல்படுகின்றன. குறிப்பாக அரங்கேற்றக் கலை, இசைக் கலை, நடனக் கலை, நாடகக் கலை ஆகியவை இக்காப்பியத்தில் விரிவாகச் சித்தரிக்கப்படுகின்றன. மாதவியின் அரங்கேற்றம் மூலம் தமிழர் நாட்டிய மரபு, இசைத்

திறன், பாண் அமைப்பு, அங்கிக-சாத்விக அசைவுகள் ஆகியவை விளக்கமாகப் பதிவு செய்யப்படுகின்றன. இதன் மூலம் சங்கத்திற்குப் பிந்தைய காலத் தமிழரின் கலை நுணுக்கம், மேடை அமைப்பு, பார்வையாளர் பங்கு போன்றவை தெளிவடைகின்றன.

மேலும், கலை என்பது வெறும் பொழுதுபோக்கு அல்லாது, சமூக நிலை, அரசியல் ஆதரவு, பொருளாதார வளம் ஆகியவற்றோடு தொடர்புடையது என்பதும் இந்நூலில் வெளிப்படுகிறது. அரண்மனை, நகர விழாக்கள், கோயில் மரபுகள் ஆகிய சூழல்களில் கலை வளர்ச்சியடைந்ததைக் காணலாம். கலைஞரின் சமூக நிலை, அவருக்குக் கிடைத்த மரியாதை, ஆதரவு ஆகியவையும் கலைகளின் உயர்வை எடுத்துக்காட்டுகின்றன.

அதே சமயம், கலை மனித உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் வல்லமையுடையது என்பதை இக்காப்பியம் உணர்த்துகிறது. காதல், விரக்தி, துயரம், நீதிக்கான போராட்டம் போன்ற உணர்வுகள் கலை வடிவங்களின் மூலம் ஆழமாக வெளிப்படுகின்றன. இவ்வகையில் கலைகள் கதைக்களத்தின் உயிராகவும், பண்பாட்டு அடையாளத்தின் பிரதிபலிப்பாகவும் அமைகின்றன. இதனால், சிலப்பதிகாரத்தில் கலைகள் என்பது தமிழரின் அழகியற் பாரம்பரியத்தையும் சமூக-ஆன்மீக வாழ்வியலையும் பிரதிபலிக்கும் முழுமையான பண்பாட்டு சான்றாக விளங்குகின்றன என்பதே இக்கட்டுரையின் சாரமாகும்.

## References

இளம்பூரணனார் (2011), தொல்காப்பியம் பொருளாதிகாரம், சாரதா பதிப்பகம், சென்னை

மாணிக்கவாசகம், ஞா. (2010) சிலப்பதிகாரம், தெளிவுரை, உமா பதிப்பகம், மண்ணடி, சென்னை

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License